[1972 சனவரி 24

State Agricultural Council

* 24 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an Agricultural Council has been set up in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, வேளாண்மை இயக்குநர் மாநில வேளாண்மை மன்றம் ஒன்றினை அமைத்துள்ளார். அதன் ஏற்புக் குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இத்தகைய வேளாண்மை மன்றங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஆங்காங்கு மாவட்ட வேளாண்மை மன்றங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்த வேளாண்மை மன்றங்களை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்படுபவர்கள் அதிகாரிகளா அல்லது அதிகாரப் பற்றற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களைப் பரிசீலிக்கவும், செயல்களை ஒருமுகப்படுத்துவதற்கும் மற்றும், காலமுறைப்படி திட்டமுன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும் அரசு பல்வேறு பகுதிகளில் ஆராய்ச்சி நிலையங்களை ஏற்பாடு செய்து இருக்கிறது. அந்நிலையங்களை ஒரு முகப்படுத்துவதற்கு இந்த மன்றங்கள் பயன்படும்.

Taxis during night

* 25 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the arrangements made by the Commissioner of Police, Madras for taxi travel for cinema goers during nights?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: "அண்ணாசிலை" "ஜெமினி" இவற்றிற்கு இடையேயுள்ள முக்கியத் திரைப்பட அரங்குகளுக்கு அருகில் வாடகைக் கார்களை நிறுத்திவைக்க அனுமதிக்கும்படி, போக்குவரத்துப் பிரிவிலுள்ள காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் கட்டளைகளிடப்பட்டிருக்கின்றன. இந்த வாடகைக் கார்கள் அங்கே நிறுத்தி வைக்கப்படுகின்றன. அவை, திரைப்பட அரங்குகளிலிருந்து வரும் பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கும் ஏற்றிச் செல்லுகின்றன.

வந்தவாசியில் அரசுப்போக்குவரத்துத் துறையின் கிளைப்பணிமனை

* 26 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காட்டில் உள்ள வந்தவாசி பேரூராட்சியில் அரசு பஸ் டிப்போ ஏதும் செயல்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை பேர் வேலை செய்கின்றனர்? எப்போது அது துவங்கப்பட்டது?